# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ    அதிவிசேஷமானது

අංක 2080/20 - 2018 ජූලි මස 16 වැනි සඳුදා - 2018.07.16

*2080/20 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு யூலை மாதம் 16 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) – பொது

### அரசாங்க அறிவித்தல்

**சம்பளச் சபைகள் கட்டளைச்சட்டம்**

அறிவித்தல்

**இறப்பர் (டயர், தியூப் உற்பத்தி, டயர் மீளப்புனைதல் உட்பட)**
**பிளாஸ்திக், பெற்றோலியம் றெசின் பொருட்கள் உற்பத்தித் தொழில்**

இறப்பர் (டயர், தியூப் உற்பத்தி, டயர் மீளப்புனைதல் உட்பட) பிளாஸ்திக், பெற்றோலியம் றெசின் பொருட்கள் உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச் சபையினால் (136 ஆம் அத்தியாயமாகிய) சம்பளச்சபைகள் கட்டளைச் சட்டத்தின் 30 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்டு இதனகத்தேயுள்ள அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்டுள்ள தீர்மானங்கள், கௌரவ தொழில், தொழிற்சங்க உறவுகள் அமைச்சர் அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளனவென அக் கட்டளைச் சட்டத்தின் 29(3) ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

இத் தீர்மானங்கள் 2018 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

எஸ். ஏ. என். சரணதிஸ்ஸ,
செயலாளர்,
தொழில் மற்றும் தொழிற்சங்க
உறவுகள் அமைச்சு.

தொழில் திணைக்களம்,
கொழும்பு 05,
2018, யூலை 10.

**அட்டவணை**

இறப்பர் (டயர், கியூப் உற்பத்தி, டயர் மீளப்புனைதல் உட்பட) பிளாஸ்திக், பெற்றோலியம் றெசின் பொருட்கள் உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்டு 1968 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 06 ஆந் தேதிய 14831 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவிப்புக்கான அட்டவணையில் தரப்பட்டு, காலத்திற்குக் காலம் வேறுபடுத்தப்பட்டவையும், 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 03 ஆந் திகதிய 1791/33 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் மூலம் கடைசியாக வேறுபடுத்தப்பட்டதுமான தீர்மானங்கள், அவ்வட்டவணையின் 11 ஆம் பாகத்தில் “மாதமொன்றுக்குக் கொடுக்கப்பட வேண்டிய ஆகக்குறைந்த சம்பள அளவு” என்னும் தலையங்கத்தின் கீழ் காணப்படும் பகுதிக்குப் பதிலாகப் பின்வரும் புதிய பகுதியினை பதிலீடு செய்வதன் மூலம் மேலும் வேறுபடுத்தப்படுதல் வேண்டும்.




*இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk.எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## II ஆம் பாகம்

மாதமொன்றுக்குக் கொடுக்கப்பட வேண்டிய ஆகக்குறைந்த சம்பள வீதம்

| ஊழிய ஆண்டு | தேர்ச்சியற்றோர் | ஓரளவு தேர்ச்சியுடையோர் | தேர்ச்சி பெற்றோர் | தொழிற் பயிற்சி பெறுவோர் தொழில் பயிலுந ர் |
|---|---|---|---|---|
| | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. |
| 1 ஆம் ஆண்டு | 10,000.00 | 10,405.00 | 10,810.00 | 7,000.00 |
| 2 ஆம் ஆண்டு | 10,100.00 | 10,530.00 | 10,960.00 | 7,200.00 |
| 3 ஆம் ஆண்டு | 10,200.00 | 10,655.00 | 11,110.00 | 7,400.00 |
| 4 ஆம் ஆண்டு | 10,300.00 | 10,780.00 | 11,260.00 | 7,600.00 |
| 5 ஆம் ஆண்டு | 10,400.00 | 10,905.00 | 11,410.00 | |
| 6 ஆம் ஆண்டு | 10,500.00 | 11,030.00 | 11,560.00 | |
| 7 ஆம் ஆண்டு | 10,600.00 | 11,155.00 | 11,710.00 | |
| 8 ஆம் ஆண்டு | 10,700.00 | 11,280.00 | 11,860.00 | |
| 9 ஆம் ஆண்டு | 10,800.00 | 11,405.00 | 12,010.00 | |
| 10 ஆம் ஆண்டு | 10,900.00 | 11,530.00 | 12,160.00 | |
| 11 ஆம் ஆண்டு | 11,000.00 | 11,655.00 | 12,310.00 | |
| 12 ஆம் ஆண்டு | 11,100.00 | 11,780.00 | 12,460.00 | |
| 13 ஆம் ஆண்டு | 11,200.00 | 11,905.00 | 12,610.00 | |
| 14 ஆம் ஆண்டு | 11,300.00 | 12,030.00 | 12,760.00 | |
| 15 ஆம் ஆண்டு | 11,400.00 | 12,155.00 | 12,910.00 | |
| 16 ஆம் ஆண்டு | 11,500.00 | 12,280.00 | 13.060.00 | |
| 1 7ஆம் ஆண்டு | 11,600.00 | 12,405.00 | 13,210.00 | |
| 1 8ஆம் ஆண்டு | 11,700.00 | 12,530.00 | 13,360.00 | |
| 1 9ஆம் ஆண்டு | 11,800.00 | 12,655.00 | 13,510.00 | |
| 20 ஆம் ஆண்டு | 11,900.00 | 12,780.00 | 13,660.00 | |
| 21 ஆம் ஆண்டு | 12,000.00 | 12,905.00 | 13,810.00 | |
| 22 ஆம் ஆண்டு | 12,100.00 | 13,030.00 | 13,960.00 | |
| 23 ஆம் ஆண்டு | 12,200.00 | 13,155.00 | 14,110.00 | |
| 24 ஆம் ஆண்டு | 12,300.00 | 13,280.00 | 14,260.00 | |
| 25 ஆம் ஆண்டு | 12,400.00 | 13,405.00 | 14,410.00 | |

08 - 50

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.